| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | **வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை**<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
| | மாவட்டம் : | **இராமநாதபுரம்** | காலம்: | **04/05/2024** | முதல் | **08/05/2024** |
| | அறிக்கை எண் : | **036/ 2024** | வெளியீட்டு நாள்: | | **03/05/2024** | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 28°-29° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| **கடந்தவார வானிலை (28.04.2024 முதல் 02.05.2024)** | | | | | | **அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 08-05-2024- 08.30 வரை** | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28/04 | 29/04 | 30/04 | 01/05 | 02/05 | **தேதி** | **நாள்-1** 04/05 | **நாள்-2** 052/05 | **நாள்-3** 06/05 | **நாள்-4** 7/05 | **நாள்-5** 08/05 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 37 | 37 | 37 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 38 | 38 | 38 |
| 29 | 29 | 29 | 28 | 29 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 29 | 30 | 30 | 29 | 30 |
| 5 | 6 | 3 | 3 | 4 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 7 | 5 | 8 |
| 70 | 73 | 70 | 70 | 78 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 52 | 64 | 68 | 72 | 81 | | 40 | 40 | 50 | 50 | 50 |
| 0 | 9 | 3 | 0 | 14 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 22 | 22 | 24 | 24 | 20 |
| 0 | தென் கிழக்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | காற்றின் திசை | **தெற்கு** | **தென் மேற்கு** | **தெற்கு** | **தெற்கு** | **தெற்கு** |

## குறுஞ்செய்தி :

அடுத்த 5 நாட்களுக்கு வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு. அதிகபட்ச வெப்பநிலையானது 37°-38° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 29° - 30° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 20 முதல் 24 கி.மீ வேகத்தில், தெற்கு மற்றும் தென்மேற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் மே 4ம் தேதி முதல் 8 தேதி வரை இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு. மேலும், மணிக்கு 30 முதல் 40 கி.மீ வேகத்தில் தரைக் காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுவதால், விவசாயிகள் வாழை மரங்களுக்கு முட்டு கொடுத்தல், பப்பாளி, கொய்யா, முருங்கை பயிர்களுக்கு மண் அனைத்தல், கரும்பு பயிருக்கு விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். கொடி வகை

செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 20 முதல் 24 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கத்தரி, தென்னை, கால்நடை.**

**கத்தரி:**
தோட்டக்கலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைத் தத்துப்பூச்சி, இலைபேன், வெள்ளை ஈக்கள் மற்றும் சுருள் வெள்ளை ஈக்களின் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

எனவே விவசாயிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்க ஏக்கருக்கு 5 என்ற எண்ணிக்கையில் மஞ்சள் வண்ண ஒட்டும் பொறிகள் வைத்து கட்டுப்படுத்தலாம்.

தாக்குதல் அதிகம் காணப்படும் நேரங்களில் 1 லிட்டர் தண்ணீரில் 50 கிராம் வேப்பங் கொட்டை கரைசல் அல்லது 30 மில்லி வேப்ப எண்ணெய் இவற்றில் ஏதாவது ஒன்றை கலந்து தெளிக்க வேண்டும்.

**தென்னை:**
கோடை காலங்களில் தென்னந் தோப்புகளில் நீர் ஆவியாதலைக் குறைக்க தென்னை மரத்தின் மட்டை, ஓலைகள் மற்றும் தென்னை நார்க் கழிவுகளைக் கொண்டு மூடாக்கு போடுதல் சிறந்த பலனைக் கொடுக்கும்.

குறிப்பாக 1.8 மீட்டர் ஆரம் கொண்ட வட்டப் பாத்திகளில் குவிவட்டப் பகுதி மேல் நோக்கி இருக்குமாறு 100 தென்னை மட்டைகள் அல்லது 15 காய்ந்த தென்னை ஓலைகள் அல்லது 10 செ.மீ உயரத்திற்கு தென்னை நார்க்கழிவினை பரப்புவதால் மண்ணில் ஈரப்தத்தை தக்க வைக்கலாம்.

**கால்நடை:**
கோடை காலத்தில் முட்டை கோழிகளுக்கு இடவசதி 2 ½ அடி வரை அதிகரிக்க வேண்டும்.

குளிர்ச்சியான சுத்தமான தண்ணீரை 5 முதல் 6 முறை வரை கொடுக்க வேண்டும்.

தீவனத்தட்டு, தண்ணீர் தட்டு போன்றவற்றை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

கோழிகள் நெருக்கடி இன்றி சுற்றித்திரிய இடவசதி ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

வெப்பத்தால் முட்டையின் மேல் ஓடு மெலிந்து காணப்பட்டால், வைட்டமின் டி, கிளிஞ்சல்தூள் போன்றவற்றை தீவனத்துடன் சேர்த்து கொடுக்க வேண்டும்.

இவ்வாறு கோடை வெப்பத்தில் இருந்து கோழிகளைப் பாதுகாப்பதன் மூலம் அவற்றின் இறப்பை தடுத்து நஷ்டம் ஏற்படுத்துவதை தவிர்க்கலாம்.